# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - 7)

**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B)**

அரசியலமைப்புகளில் திருத்தங்கள் செய்யப்படுவது ஒரு வழமையான செயற்பாடே. இது எல்லா நாடுகளிலும் காலத்திற்கு காலம் நாட்டுக்கு அவசியமெனக் கருதப்படும் விடயங்கள்: நடைமுறைகள்: நீதிமன்றத்தின் நியாயாதிக்கங்கள் போன்ற பல விவித மாற்றங்கள் திருத்தங்கள் புதியனவற்றை புகுத்தல்கள் ஆகியன பாராளுமன்றத்தினால் தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றும்போது, சாதாரண சட்டங்களை சாதாரண பெரும்பான்மையோடு நிறைவேற்றுவது போன்றில்லாமல் 2/3 பெரும்பான்மை வாக்குகள் அவசியமாகின்றது. சில முக்கியமான திருத்தங்களுக்கு 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய பின்னரும் கூட நாடளாவிய ரீதியில் மக்கள் கருத்தும் அறியப்படும். ஒரு திருத்தத்தை அரசியலமைப்பில் கொண்டு வருவதற்காக பாராளுமன்றதில் சமர்ப்பிக்கப் பட்டதும் அத்திருத்தம் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு விதிகளுக்கு ஏற்புடையதா அல்லது முரண்படுகிறதா என உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தை அறிவதற்காக அங்கு அனுப்பிவைக்கப்படும். அது அரசிலமைப்புக்கு முரண்படவில்லை என்றால் மட்டுமே அதுபற்றி விவாதம் நடத்தி திருத்தத்தைச் சேர்க்க முடியும். உயர்நீதிமன்றம் தனது அபிப்பிராயத்தைக் கூறும் போது 2/3 பெரும்பான்மை மட்டும் போதுமா அல்லது சர்வஜன வாக்கெடுப்பும் தேவையா என தனது விளக்கமான அபிப்பிராய அறிக்கையில் கூறிவிடும்.

1978ம் ஆண்டைய அரசியலமைப்பு ஏற்பாடுகளின்படி பாராளுமன்றத்தின் தவணைக்காலமும் ஜனாதிபதியின் பதவிக்காலமும் 06 ஆண்டுகளென குறிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகை 168 என இருந்து 196 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது.

**சோல்பரி அரசியலமைப்பில்** எட்டுத் திருத்தங்கள் ‘பிரதிநிதிகள் சபையில்’ மேற்கொள்ளப்பட்டதாக காணப்படுகிறது. அவற்றில் முக்கியமானவையாவன:

1. 30.12.1961 அன்று தேர்தல் நீதிபதி என்ற ஒரு பதவியை உருவாக்குவதற்கு
2. 12.03.1964 அன்று தேர்தல் ஆணையாளரின் பதவியை அரசியலமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கும் அதற்கான சம்பளக் கொடுப்பனவு பற்றி ஏற்பாடு செய்வதற்கும்
3. 18.11.1970 அன்று அரச ஊழியர்கள் தேர்தலில் பங்குபற்றுவதற்கு வகை செய்தலுக்கு
4. 02.10.1971 அன்று செனற் சபையை இல்லாதொழித்தலுக்காக

**1972ம் ஆண்டைய முதலாவது குடியரசு அரசியலமைப்பில்** இரண்டு திருத்தங்கள் ‘தேசிய அரசுப் பேரவையில்’ மேற்கொள்ளப்பட்டன. அவையாவன:

1. 11.02.1975 அன்று 75,000 வாக்காளருக்கு ஒரு தொகுதி என்பதை 90,000 வாக்காளருக்கு ஒரு தொகுதி என மாற்றம் செய்வதற்காக.

2. 04.10.1977 அன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசுத் தலைவர் (ஜனாதிபதி ஆட்சி) முறை அமுல்படுத்துவதற்காகவும் அப்போது பிரதமராக இருந்த ஜூலியஸ் ரிச்சட் ஜயவர்தனாவை 1978 ஆண்டு பெப்ரவரி 04ந் திகதியன்று அரசுத்தலைவராக ஆக்குவதற்காகவும்.

**1978ம் ஆண்டைய இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில்** இதுவரை பத்தொன்பது திருத்தங்கள் 'பாராளுமன்றத்தில்' செய்யப்பட்டுள்ளன. அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப தனித்தனியே ஆராயலாம்.

**முதலாவது திருத்தம்** : அத்தியாயம் 16 - மேனிலை நீதிமன்றங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தத்துவத்தில் உறுப்புரை 140இல். திருத்தம் செய்யப்பட்டுள்ளது. முதனிலை நீதிமன்றங்களின் : நியாயசபைகளின் பதிவேடுகளை சோதனையிடுவதற்கும் பரிசோதிப்பதற்கும் உள்ள அதிகாரமும் தத்துவமும் மேலும் ஆட்கொணர் எழுத்தாணை தவிர்ந்த ஏனைய எழுத்தாணைகளை வழங்கும் அதிகாரத்தையும் தத்துவத்தையும் இவற்றில் ஏதேனும் விடயங்கள் சார்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றலாம் எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**இரண்டாவது திருத்தம்** : அத்தியாயம் 21 – நிலைமாறுகால ஏற்பாடுகள் என்ற தலைப்பில் உறுப்புரை 161இல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி முதலாவது பாராளுமன்றக் காலத்தில் ஒரு உறுப்பினர் அவரது கட்சியினின்றும் இராஜினாமா செய்தால் அல்லது விலக்கப்பட்டால் அது 2வது குடியரசு அரசியலமைப்பு (1978) உருவாக்கம் பெற முன்னர் அல்லது பின்னர் நடைபெற்றிருப்பின் என்னவிதமான முறையில் அவர் பதவி சம்பந்தமாக செயற்பாடுகள் அமையும் என்பதைத் இத்திருத்தம் கூறுகின்றது.

முதலாவது பாராளுமன்றக் காலத்தில் அரசியலமைப்பு உருவாக்கப்பட முன்னரோ அல்லது பின்னரோ ஒரு உறுப்பினர் ஒரு கட்சியினின்றும் தானாக விலகினால் அல்லது விலக்கப்பட்டால் அல்லது வேறு வகையில் விலகியிருந்தால் அக்கட்சியின் செயலாளர் அந்நிகழ்வுபற்றியும் திகதி பற்றியும் நடைபெற்ற இரண்டு கிழமைக்குள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அவர் அதை பாராளுமன்ற சபாநாயகருக்கு கையளித்தல் வேண்டும். பாராளுமன்ற சபாநாயகருக்கு அறிவித்தல் கிடைத்ததும் அவர் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழு ஒன்றை நியமித்து அதில் ஒருவரைத் தலைவராக்கி விசாரணை செய்து எத்தகைய சூழ்நிலையில் குறித்த உறுப்பினர் விலக அல்லது விலக்கப்பட நேர்ந்தது என்பது குறித்து அறிக்கை சமர்பிக்கும்படி கோருவார். தெரிவுக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து 85 உறுப்பினர்களுக்கு குறையாதவர்கள் விலகியது அல்லது விலக்கியது சரி என்றால் அந்த உறுப்பினரின் ஆசனம் திகதி குறித்து அன்றிலிருந்து வெற்றானது என சபாநாயகர் சான்றிதழ் வழங்குவார். அச்சான்றிதழை எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்த முடியாது என இத்திருத்தச் சட்டம் கூறுகின்றது.

கட்சியினின்றும் விலக்கப்பட்டிருந்தால் அவ்வுறுப்பினர் ஒரு மாத காலத்தினுள் உயர்நீதிமன்றுக்கு தன்னை விலக்கியது பிழையென மனுத்தாக்கல் செய்யலாம்.

அவ்வாறு அவர் மனு தாக்கல் செய்ததை உயர்நீதிமன்ற பதிவாளர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் இரண்டு மாதத்திற்குள் விளங்கி அவரை விலக்கியது சரியா பிழையா எனத் தீர்ப்புக் கொடுக்க வேண்டும். கட்சியிலிருந்து விலக்கப்பட்டிருந்தால் உயர்நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கவிருப்பதால் பாராளுமன்ற தெரிவுக் குழு அமைக்கப்படமாட்டாது.

இந்த இரண்டாவது திருத்தம் அவசரமாகக் கொண்டு வந்ததற்கும் நிறைவேற்றியதற்கும் முக்கிய காரணம் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சி. இராசதுரை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை விட்டு விலகியதும் அரசாங்கத்தில் சேரக்காட்டிய விருப்பமுமேயாகும். மட்டக்களப்பு ஒரு இரட்டை அங்கத்தவர் தொகுதியாகும். ஒரு தமிழரும் ஒரு முஸ்லீமும் வெற்றி பெறக்கூடிய நிலைமையுள்ள தொகுதி. ஆனால் தமிழர் முன்னணி சார்பில் உதய சூரியன் சின்னத்தில் இராசதுரையையும் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் காசி ஆனந்தனையும் அத் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தியிருந்தார்கள். இதனால் சினமடைந்த இராசதுரை வெற்றியின் பின்னர் கட்சியை விட்டு விலகி அரசில் சேர விரும்பிய காரணத்தால் அவரை அமைச்சராக்கி அரசில் தமிழருக்கு இடம் கொடுத்ததாக வெளிக்காட்ட வழிசமைத்தது. அவர் கட்சியினின்றும் விலகுவதற்கும் அரசில் சேருவதற்கும் இந்தத் திருத்த சட்டம் உதவியது.

**மூன்றாவது திருத்தம்** : அதிகாரம் 7லில் ஆட்சித்துறையில் குடியரசு ஜனாதிபதி என்ற தலைப்பில் உறுப்புரை 31இல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி முதல் .தடவையாக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 04 ஆண்டுகள் கழிந்த பின்னர் ஒரு பிரகடனத்தின் மூலம் நாட்டு மக்களிடமிருந்து ஆணையை பெற்று மேலும் ஒரு தவணைக் காலத்திற்கு (06 ஆண்டுகள்) நீடித்து பதவியிலிருக்க மக்கள் கருத்து அறியப்பட்டது. 1982ம் ஆண்டு நடைபெற்ற கருத்துக் கணிப்பில் ஆணையை கொடுப்பதாயின் ‘‘ஆம்’’ எனவும் ஆணையைக் கொடுக்க மறுப்பவர்கள் ‘‘இல்லை’’ எனவும் வாக்களித்து ‘‘ஆம்’’ கூடிய வாக்குகளைப் பெற்று மேலும் 06 வருடங்களுக்கு தொடர்ந்து ஜயவர்த்தன ஜனாதிபதியாக செயற்பட்டார்.

**நான்காவது திருத்தம்** :அத்தியாயம் 21 – நிலைமாறுகால ஏற்பாடுகள் என்ற தலைப்பில் உறுப்புரை 161இல் மேலும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திருத்தம் முதலாவது பாராளுமன்றத்தின் தவணைக்காலத்தை 1989ம் ஆண்டு ஆகஸ்டு 04ந் திகதி வரையிலும் நீட்டிப்பதற்கு கொண்டு வரப்பட்ட திருத்தமாகும்.

**ஐந்தாவது திருத்தம்** : அத்தியாயம் 21 – நிலைமாறுகால ஏற்பாடுகள் என்ற தலைப்பில் உறுப்புரை 161இல் மேலுமொரு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பதவி ஏதாவது முறையில் வெற்றிடமாகியது என அறிவித்தல் கிடைக்கப்பெற்றால் அக்கட்சியின் செயலாளர் அவ்வாறு வெற்றிடமாகிய முப்பது நாட்களுக்குள் அந்த வெற்றிடத்திற்கு ஒருவரை நியமித்து பரிந்துரைக்க தவறும் போது அது பற்றிய தகவலை தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதிக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவ்வாறு அறிவித்தல் கிடைத்த முப்பது நாட்களுக்குள் ஜனாதிபதி வர்த்தமானியில் அறிவித்தல்

கொடுப்பதன் மூலம் தேர்தலை நடத்தி வெற்றிடத்தை நிரப்ப தேர்தல் ஆணையாளருக்கு கட்டளை பிறப்பிப்பார் என கூறப்பட்டுள்ளது.

**ஆறாவது திருத்தம்** : அத்தியாயம் 14 -- வாக்குரிமைகளும் தேர்தல்களும் என்ற தலைப்பில் உறுப்புரை 101: அத்தியாயம் 20 – பொது என்ற தலைப்பில் உறுப்புரை 157: அத்தியாயம் 21 – நிலைமாறுகால ஏற்பாடுகள் என்ற தலைப்பில் உறுப்புரை 161இல் திருத்தம் ஆகிய மூன்று உறுப்புரைகளில் திருத்தங்களை மேற்கொண்டே 6வது திருத்தம் உருவாக்கப்பட்டது. இந்தத் திருத்தம் கொண்டுவந்த பின்னர் நாடும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கட்சியும் பெரும் நெருக்கடிக்குள்ளாகியது.

**“ஆகிய நான்** இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் இலங்கையின் ஆட்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவு அளிக்கவோ ஆக்கமளிக்கவோ ஊக்குவிப்பு அளிக்கவோ நிதி உதவவோ ஊக்குவிக்கவோ பரிந்துரைக்கவோ மாட்டேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிசெய்கின்றேன்.” என உறுதி செய்தோ அல்லது சத்தியம் செய்தோதான் பாராளுமன்றத்தில் பங்குபற்றலாம் என்ற அரசின் நிலைப்பாடு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உறுப்பினர்களை பாதித்து அவர்களின் பாராளுமன்ற ஆசனங்களையும் இழக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

(தொடரும்)